உ

கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி. ௧. } சௌமிய வருஷம் ஆனிமீ { பகுதி. ௫.

காலையிலெழுதல்.

சரீர சுகத்திற்கு நித்திரை இன்றியமையாதது; ஆயினும் பொழுதோடு படுத்துறங்கிப் பொழுதோடு விழித்தெழுந்தால்தான் நன்மை உண்டாகும் என்பதை எவரும் மறக்கவொண்ணாது.

இவ்வுலகத்தில் சீரும் சிறப்பும் சௌக்கியமும் சம்பத்தும் வாய்ந்த பெரியோர்களுடைய ஜீவிய சரித்திரத்தை வாசிப்பமேல் அன்னோரிற் பெரும்பாலார் அதிகாலையில் எழுந்திருக்கும் வழக்கத்தைக் கைக்கொண்டவர்களென்றும், அவ்வதி முக்கிய வழக்கம் அவர்களிடத்திலிருந்ததன் நிமித்தமே அவர்கள் உன்னத நிலையுற்றனர் என்றும் தெரியவரும்.

நம் முன்னோர்களிடத்தும், தற்காலத்தில் சில கிராமாந்தரங்களிலுள்ளோரிடத்தும், "வைகறைத் துயிலெழும்" வழக்கம் உண்டென்பதை நாம் நன்கறிவோம். இன்றும், நாட்டுப்புறங்களில் அந்தணோத்தமர்களும் பிறரும் வைகறையாமந் துயிலொழிந்து புனலாடி இந்திராக்ஷி, சிவகவசம், தேவாரம், திருவாசகம், திருவாய்மொழியாதிய இசைப்பதும் தேவாலயங்களில் 'திருப்பள்ளியெழுச்சி' முதலியன நடத்துவதும் அறியாதார் யார்?

ஆயினும் பெரும்பான்மையோர் விடிந்து 8மணி வரைகூட கம கம என்று துப்பட்டியைப் போர்த்துக் கொண்டு தூங்குகின்றனர். 9மணிக்குப் பின்னும் உறங்கும் உத்தமர்களுமுண்டு. இன்னோர் காலை விழிப்பின் நற்பயனை யறியாததனாலோ அல்லது சோம்பேறித் தனத்தாலோ இவ்வாறு செய்துவருகின்றனர். இவ்வாறு தூங்குவது தவறு. ஆதலின், பொழுது புலருமுன் எழுதலால் உண்டாகும் நன்மைகளையும் எழாது படுத்துறங்குவதால் நேரும் தீமைகளையும் ஒருவாறு விளக்கிக் காட்டுவாம்:—

வைத்திய சாஸ்திர நிபுணர்கள்,

"புத்தி யதற்குப் பொருந்து தெளிவளிக்குஞ்
சுத்த நரம்பினறற் றூய்மை யுறும் — பித்தொழியுந்
தால்வழி வாதபித்தம் தத்தநிலை மன்னும்அதி
காலைவிழிப் பின்குணத்தைக் காண்"—என்றனர்.

இதன்பொருள் யாதெனில், 'அதிகாலையில் விழிப்பவர்களுக்குப், புத்திக்குத் தெளிவை யுணர்த்துகின்ற "சுத்த நரம்பு" என்ற ஒருவித நரம்பினது துவாரத்தில் நிறைந்திருக்கிற நீரானது கலங்கலின்றிப் பரிசுத்தமாயிருக்கும். பைத்தியம், கோபம் இவை நீங்கும். வாதமும் பித்தமும் சிலேஷ்மமும் தத்தம் இடங்களிலேயே பொருந்தும்' என்பதே.

இரண்டாவது:— காலைப்பொழுதிற்றான் இராத்தூக்கத்தின் பயனாக புத்தி களங்கமற்றும் சரீரங்களைப்பற்றும் இருக்கும். அதுவே வெய்யோன் கிரணம் வெளிப்படாக் காலம்; வீங்கிளந் தென்றல் வீசும் நற்சமையம். ஆதலின் படியாத விஷயங்களைப் படித்தற்கும் படித்த விஷயங்களைச் சிந்திப்பதற்கும் ஏற்ற தருணமாகும். இதுபற்றியே வேதாத்தியயனம் பண்ணுவோர், பாடகர்கள், தேகப்பயிற்சி செய்வோர் முதலிய சகல வித்தியார்த்திகளும் சிரமப்பட்டு அதிகாலையில் எழுந்து தத்தம் வித்தையை முற்காலத்திற் கற்றார்கள்; இன்றும் கற்று வருகிறார்கள்.

மூன்றாவது:— மலஜலங்கள் கழிப்பதற்குத் தக்க தருணம் காலை வேளையே. அப்பொழுது நித்திரை செய்தால், அவை வெளியாகாமல் வயிற்றில் தங்கிவிடும். இவ்வாறு தங்குவதால் பலவித வியாதிகள் உண்டாகும். அவற்றைக் காலாகாலத்தில் கழித்து விட்டாலோ எவ்விதத்துன்பமும் இராது.

நான்காவது:— இருட்டுவேளையில் நாம் துயிலொழிந்தெழுந்து இரண்டொரு நிமிஷம் கழித்து மினுக்கு மினுக்கெனச் சிற்றொளி காட்டும் ஓர் விளக்கைப் பார்க்கின் நம் கண் கூசமாட்டாது. அவ் விளக்கொளியை வரவரப் பெரிதாக்கிய காலத்தும் கண்ணுக்கு எவ்வித அதிர்ச்சியும் உண்டாகாது. இவ்வாறின்றி, விழித்தும் விழியாததும் திடீரென்று கொழுந்து விட்டெரியும் தீவர்த்தி ஒளியைப் பிடித்தால் கண்ணுக்கு எவ்வளவு கூச்சமும் அதிர்ச்சியும் உண்டாகும்? அற்ப நெருப்பைப் பார்த்தலே கண்ணுக்குக்கெடுதி எனின், பெரிய அக்கினிப் பிழம்பாகிய சூரியனை எட்டுமணிக்குப்பின் காண்டல் கண்ணுக்கு எத்துணை கேட்டைத்தரும்! ஞாயிறு உதித்திடும் முன்னமே எழுந்து சிறுவெளிச்சமுள்ள இள வெயிலை முதலிற் கண்ணுற்று வரவர அதன் சுடுகொடுங்கதிரைக் கண்ணுறினோ கண் சிறிதும் கெடாது. இதுபற்றியே சர்வஞ்ஞான கடவுள் பகலுக்குப் பின் இரவும் இரவிற்குப்பின் பகலும் வரும்போது இவ்விரண்டிற்கும் இடையில் அந்தி சந்திகளை ஏற்படுத்தி இருக்கிறார். இவ்வந்திசந்திகளை ஆங்கிலத்தில் "ட்வைலைட்" (Twilight) என்பர். "Twilight" என்ற பதத்திற்கு (Two lights) இருவெளிச்சம் என்பது பொருள் [அதாவது பகலும் இரவும் சந்திக்கும் போதுள்ள வெளிச்சம்.]

ஐந்தாவது:—கோழி, காக்கை, வானம்பாடி யாதியபட்சிசாலங் கூட அதிகாலையில் எழுந்து உல்லாசமாய் இனிய குரலுடன் பாடும்போது அறிவுடையோராகிய மனிதர் அக்காலத்தைத் தெய்வஸ்துதியிலும், விசேஷமனோபிவிருத்தி செய்வதினும் பற்பலகாரியங்களில் சித்திபெறுவதிலும் செலவுசெய்யாமல் தமதுசரீரத்துச் சுத்தாரம்புக்கும் படிப்புக்கும் பயிற்சிக்கும் கேடுண்டாகத் தூங்குவது எவ்வளவு அயுக்தமானவிஷயம்!

ஆறுவது:—வைகறை தேவர்களுக்குரிய காலமாதலால் இதில்நித்திரை செய்யின் தேவசாப முண்டாகும். அச்சாபத்திற் குள்ளாகாதபடி தக்கநேரத்திலேயே எழுந்திருக்க வேண்டும்.

ஏழாவது:— ஒவ்வொருவரும் மலஜலம்கழித்துப் பல் தேய்த்து முகங்கழுவி ஸ்நானம்செய்து தாங்கள் முன்பு உடுத்தவஸ்திரம் தோய்த்து சுத்த உடை யணிந்து நித்திய கர்மானுஷ்டானம் பூஜை முதலியனமுடித்துக்காலைஉணவருந்துவதற்கே சுமார்1மணி அல்லது 1½ மணி நேரமாகும். 7 அல்லது 8மணி வரை தூங்கிப் பின்பு இவற்றைச் செய்தால் 9மணியாவது ஆகுமல்லவா? இதற்கே 9மணியாய் விட்டால் பிறகாரியங்களை எப்பொழுது பார்க்கிறது? இக்காரியம் யாவும் நாம்வயிற்றுப்பாட்டின்நிமித்தம் உழைத்துப்பொருள்தேடச் செல்லுமுன் முடியவேண்டிய வைகளன்றோ? ஆதலின் தத்தம் சரீரத்தைப் பொறுத்த இவ்வின்றியமையா வேலையைச் செய்யும் பொருட்டாவது அதிகாலையில் எழுந்திருக்க வேண்டாமா?

இவற்றை யெல்லாம் நன்குணர்ந்தன்றோ உலகத்தார்க்கு நீதிநூற் பொருட்களை நுணுக்கமாகச் சிறுசிறு வாக்கியங்களால் வெளியிட்ட ஔவையார், 'வைகறைத்துயிலெழு' என்று கட்டளையிட்டுள்ளார். ஆகிலும் இந்நீதியை இளமை தொட்டேகற்ற அநேகர் கற்றறி மூடராகி நெடுந்துயில் கொள்ளுகிறார்களே! ஈதென்னபரிதாபம்! இத்துர் வழக்கத்தால் வரும் பெரிய நஷ்டத்தை ஒருஉதாரணத்தால் உணர்த்துவோம்: ஒரே வேளையில் படுத்துறங்கும் இருவருள் ஒருவன்மட்டும் பிரதிதினமும் 5மணிக்கும் மற்றவன் 7மணிக்கும் எழுவதாக எண்ணுவோம். இவ்வாறு நாற்பதுவருஷம் நடந்துவந்தால் நாள் ஒன்றுக்கு 2மணி விதம் 29,000 மணிநேரம் வித்தியாசப்படுமன்றோ? இரண்டு மணிநேரம் தாழ்த்து விழிப்பதால் உண்டாகும் வித்தியாசம் இவ்வளவாயின் 8மணிக்கு எழுந்திருப்பின் 43,500 மணிநேரம் அல்லவா வித்தியாசப்படும்? பெருந்துயில்கொள்வோன் விழித்திருப்பானாயின் இத்தனைமணிநேரங்களில் எவ்வளவு காரியங்களைச் செய்திருக்கக்கூடும்? அவன் மாணாக்கனாயிருப்பின் எவ்வளவு கல்விப்பொருளும், வணிகனாயிருப்பின் எவ்வளவு செல்வப்பொருளும் பெற்றிருக்கலாம் பாருங்கள்!

இதுகாறும் கூறியவாற்றால் அதிகாலையில் எழுவதா லுண்டாகும் நற்பயன்களும், எழாததால் வரும் தீமைகளும் பச்சை மரத்தறைந்த ஆணிபோற் படிப்போர் மனத்திற் பதிந்தே யிருக்குமென்றெண்ணுகிறோம்.

“ஆ! ஆ! இவ்வுண்மைகளை ஓராமல் இதுகாறும் நமது வாணாளை வீணாளாகக் கழித்துத் தூங்கித் தொலைத்தோமே” என்று அநேகர் வருந்தக் கூடும். அவ்வாறு வருந்துவோர்க்கு நாம் சொல்லும் புத்திமதி இதுவே: சென்று போன காரியத்தை நினைந்து நினைந்து நெஞ்சம் புண்ணாவது வீண். (ஏனெனில் சென்ற நாட்கள் என்றும் வாரா.) இனியேனும் இயன்றவரை இத்துர்வழக்கத்தை ஒழிக்கப் பாடுபடுவதே அறிவிற்கடுத்த விஷயம். “வருந்தினால் வாராதது ஒன்றுமில்லை.” நிற்க.

அதிகாலையில் தூங்கித் தூங்கிக் காலத்தைக் கழித்தோர் பலர் வைகறையில் எழவேண்டும் என்று எவ்வளவோ உறுதியாகத் தீர்மானித்துக்கொண்டபோதிலும் அவர்களுக்கு அக்காலத்தில் துயிலொழிந்தெழ இலேசில் மனம் வராது. அவர்களை எழுப்பினாலும் ஏதாவது சாக்குப்போக்குகள்சொல்லி உறங்கவேசெய்வர். அல்லது எழுப்புவோரது தொந்தரவுபொறாமல் எழுந்தும் அவர்களை மனத்திற்குள் வைதுகொண்டே ஓர் மறைவிடந்தேடி ஆங்கு முடங்கிக் கிடப்பர். இன்னோர் பிரஷியாதேசத்தை ஆண்ட “மகா” பிரடரிக் (Frederick II.) கின் நன்மாதிரியைப் பின்பற்றினால் மிக்க நன்மையுறலாகும்:

இம்மகான் தாம்அதிகாலையில்தூங்கும் துர்வழக்கத்தை அறவே ஒழிக்கத்தீர்மானித்துத் தம்மை சுமார் 4½மணிக்கே எப்படியேனும் எழுப்பிவிடும்படி ஒருநாள் வேலைக்காரன் ஒருவனுக்குக் கண்டிப்பாகக் கட்டளையிட்டனர். இக்கட்டளைப்பிரகாரம் வேலைக்காரனும் மறுதினத்தில் குறித்தவேளையில் மகாராஜாவை எழுந்திருக்கும்படி கேட்டுக்கொண்டான். ஆயினும் கரும்புபோன்ற நித்திரையினின்றும் எழ அவர்க்கு மனம்வரவில்லை. அரசர் எழாததுகண்டு வேலைக்காரன் அவரைத்தொட்டு எழுப்பி “மகாராஜா! தயவுசெய்து எழுந்திருக்கவேண்டும்” என்று கெஞ்சினான். அப்போதும் அரசருக்கு

எழ மனம்வராமல் அரைத்தூக்கத்துடன் "அடா! என்னைத் தொந்தரவு செய்யாதே. மிக சிரமமாக இருக்கிறது. சற்றுநேரம் கழித்து என்னை எழுப்பு" என்றார். வேலைக்காரனோ "அஃதெல்லாம் முடியாது. இப்பொழுதே தங்களை எழுப்பிவிட எனக்கு உத்தரவு. ஆதலால் அதன்படியே நான் செய்துதீருவேன். தாங்கள் எழுந்தே தீரவேண்டும்" என்றான். அரசர் மூடிய கண்ணுடனேயே "நீ சொல்லியது சரியே. ஆயினும் இன்னும் அரையேஅரை நாழிகை என்னைத் தூங்கவிடு. பின்னர்என்னைஎழுப்பு" என்றார். ஆயினும் வேலைக்காரன் "அப்படி உங்களுக்கு இடம்தர எனக்கு உத்தரவில்லை" என்று கண்டித்துக்கூறி முன்பு அரசர் தன்னிடம் சொல்லிவைத்திருந்தபடியே ஓர் கைச்சவுக்கத்தை எடுத்து அதைப்பனிபோற் குளிர்ந்த நீரில் நனைத்து வேந்தனுடைய முகத்தில் மூடினான். அரசர் குளிர் பொறுமல் தக்ஷணமே எழுந்து முதலில் வேலைக்காரன்மீது கோபம் கொண்டனர். ஆயினும் அக்கோபம் 'நீர்கிழிய வெய்த வடுப்போல' மாறிற்று. மாறவும் அவர் வேலைக்காரனை விளித்து "அப்பா! நீ அதிதைரியசாலியே. உன்னைப்பிடித்த நல்லவேளையே என்னை எழுப்பினை. என்னைமட்டும் நீ தூங்கவிட்டிருந்தாயாபின் நீ படும்பாடு சொல்லிமுடியாது. உன் தலையை வாங்கியே இருப்பேன்" என்று சொல்லி வேலைக்காரனின் துணிகரச்செயலைப் பலவாறு வியந்தோதினர். இவ்வாறு இரண்டொருநாட்கள் செய்யவே அவ்வரசர் காலையில் துயிலும் வழக்கம் நீங்கி எவரும் எழுப்பாமலே வைகறைத்துயிலொழிந்தெழுந்தனர். நிற்க.

அதிகாலையில் எழுவிருப்பமுடையோர் சுத்த வீரரும் ராஜதந்திர நிபுணரும் நூலாசிரியருமான இப்பிரடரிக் அரசரின் சரித்திரம் மட்டுமேயன்றி மகாஅலெக்சாந்தர், நெப்போலியன், கிராஞ்சி, ஹானிபால், உவில்லியம்ஜேம்ஸ் பண்டிதராதியோருடைய சரித்திரத்தையும்படித்துணர்க.

இனிக் கடைசியாக இரண்டொரு வார்த்தைகூறி விஷயத்தை நிறுத்துவோம்:

"(இரவிற்) சிக்கிரம்படுத்துறங்கிக் (காலையிற்) சீக்கிரம் எழும் வழக்கத்தால் ஒருவனுக்குத் தேகாரோக்கியமும் திரவியலாபமும்

தெள்ளறிவும் உண்டாகும்'' என்னும் முதுமொழியை யாவரும் மறவாமல் இளமைதொட்டே,

" வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதிற்
றந்தையும் தாயும் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட முறை."

என்பதைக் கடைப்பிடித்து வைகறையாகிய பின்சாமத்தில் விழித்துக்கொண்டு செய்தற்குரிய கருமங்களையும் (நல்வழியில்) திரவியம் சம்பாதித்தற்குவேண்டிய மார்க்கங்களையும் நன்காய்ந்து பின்பு தக்க விதத்தில் தாய் தந்தையரைத் தொழுதெழுந்து எக்காரியத்தையும் செய்யத்தொடங்கவேண்டும்.

" காட்டுக் களைந்து கலங்கழீஇ இல்லத்தை
ஆப்பிநீர் எங்குந் தெளித்துச் சிறுகாலை
நீர்ச்சால் கரகம் நிறைய மலரணிந்து
இல்லம் பொலிய அடுப்பினுள் தீப்பெய்க
நல்ல துறல்வேண்டு வார்''

என்பதை அனுசரித்து, மகளிர், அதிகாலையில்எழுந்து மங்களகரமாக வீட்டை விளக்கிச் சாணிநீர் தெளித்து மெழுகிப் பாத்திரங்களைச் சுத்திசெய்து பெரிய நீர்ச்சால்களிலும் சிறிய கரகங்ளிலும் மலர்களையிட்டுப் பிறகு அடுப்பில் நெருப்புமூட்டிச்சமைக்கத்தொடங்குவார்களாயின் செல்வம் ஆரோக்கியம் முதலான சகலபாக்கியங்களுமுண்டாகு மென்பதற்கு ஐயமில்லை.

பத்திராதிபர்.

பாலிய விதவைகள்.

1901-ம் வருஷத்திய குடிஜனத்தொகைக் (census) கணக்கைப் பார்வையிடும்போது எப்பேர்ப்பட்ட கல்மனமும் கரைந்து உருகாதிராது. வங்காளத்தில் மட்டும் ஒருவயதுக்குக் கீழ்ப்பட்டு 539 விதவைகள் இருக்கின்றனர். இவர்களில் இந்துக்கள் 433; மகமதியர் 100; புத்தமதத்தவர்கள் 2; பிறமதஸ்தவர்கள் 4. இதுபோக ஒருவயதுக்கும் இரண்டு வயதுக்கும் இடையில் உள்ள விதவைகள் 576. இரண்டுக்கும் மூன்றுக்கும் இடையில் உள்ளவர்கள் 651. மூன்றுக்கும் நாலுக்கும் இடையில் 1756; நாலுக்கும் ஐந்துக்கும் இடையில் 3861; ஐந்துக்கும் பத்துக்கும் இடையில் 34,705; பத்துக்கும் பதினைந்துக்கும் இடையில் 75,590. இவ்வாறு பங்காளத்தில் மட்டும் 55லட்சம் விதவைகள் இருக்கின்றனர். கல்யாணமான பாலியப் பெண்கள் கோடியே இருபதுலட்சம். கல்யாணமாகாத சிறுமிகள் 72லட்சம். பங்காளம் ஒன்றில்மட்டும் 4 பெண் குழந்தைகளில் ஒன்று விதவையாயின் இந்தியா முழுவதிலும் உள்ள சிசுவிதவைகளின் தொகை எவ்வளவு பெரிதாயிருக்கும்?

கல்வியும் நாகரீகமும் விருத்தியடைந்து வருவதாகச் சொல்லிக் கொள்ளப்படும் இக்காலத்திற்கூட பாலிய விவாக துர்ஆசாரம் தொலைந் தொழியாதிருப்பது எவ்வளவு பரிதாபம்! தருமசாஸ்திரத்திற்கூட பெண்களுக்கு விவாகம் செய்யத் தக்கபருவம் 8வயது என்று அல்லவா சொல்லப்பட்டிருக்கிறது! இதற்கும் விரோதமாக ஒன்று இரண்டு பிராயத்தில் பெண்களுக்கு விவாகம் செய்யும் பெற்றோரின் பேதைமையை என்னென்பேம்! இவ்விவாகத்தால் அன்னோர்க்கு மாம்ஸவிக்ரயப்பணம் கைமேற் கிடைக்கும் பயனைத்தவிர பெண்ணுக்காவது மாப்பிள்ளைக்காவது என்ன சாதகமிருக்கிறது? பாலப்பருவமே அம்மைமுதலிய பல வியாதிகளுக்கும் உரிய காலமென்றறிந்திருந்தும் இப்பாவிகளும் பிறரும் ஒருமனப்பட்டுக் கல்யாணத்தைக் நிறைவேற்றிவிடுகிறார்களே! ஈதென்ன கொடுமை! கல்யாணம் பண்ணிவைக்கும் புரோகிதர்களும் காசாசையாலல்லவோ இக்கொடிய செயலுக்கு உடன்படுகிறார்கள். என்றைக்கு இத்துர்வழக்கம் இந்தியாவை விட்டுத் தொலையுமோ அன்றைக்குத்தான் அதற்கு க்ஷேமம் உண்டாகப்போகிறது.

J. R. சந்திரையர்.

* ஈகை.

நிலைமண்டில ஆசிரியப்பா.

அருமைசா லன்பும் அருளு முடையீர் !
ஈகை யென்ன இயம்பப் படுவது
யாதென் வினவில் ஓதுவன் கேண்மின்:
பூர்வ கன்மப் பூரண மின்மையும்
ஆர்வ மதனால் அதுவு மிதுவுஞ்
சேர்வோ மென்னுந் தீதெண் ணமுமே
ஒன்றாய்ச் சேர்தலி னன்றோ யாமும்
பார்தனிற் சன்மம் படைத்தோம் அந்தோ !
எத்தனை விதமா யெய்தப் படுமோ
அத்தனை விதமு மளப்பில் செல்வம்
அடையப் படினு மளப்பில் காலம்
இருப்பமோ புவியில்? எண்ணுதற் கிலையே.
நெருந லுள்ளோ னின்றிலை யென்னும்
பெருமையை யுடைய தன்றோ இப்பூ ?
ஆதலிற் செல்வ மடைந்தவன் பயனாய்ச்
செய்வகை யாதெனத் தேர்ந்துமற் றவ்வகை
செய்திட லன்றோ தெள்ளியோர் செய்கை ?
“ ஈதா கொடுவெனு மூன்று முறைமைய
இழிந்தோ னேப்போன் மிக்கோன் இரப்புரை ”
என்று நன்னூல் இசைப்பதற் கேற்ப,
ஈத லென்பது தன்னினு மிழிந்தோர்க்
காதர வாகவே அளிக்கப் படுகையாம்.
உத்தம மத்திமம் அதம மெனவே
யித்தினிற் பிரிவு மியம்பப் படுமால்.

---

* இவ்வியாசமானது “ஆனைமலை திராவிட வேத சங்கத்தின்” ஒரு வாரத்திய பிரசங்கமாகும்.

தன்னா லுதவி செய்யப் படுவோன்
இந்நா னிலத்தி லிருக்கின் அவன்றான்
விரும்பா முனஞ்செயல் மேலாம் உத்தமம்.
விரும்பிப் பின்செயல் மேவிய மத்திமம்.
விரும்பியும் பலநாள் வெறுத்துப் பின்னரே
உறும்வகை செய்திடல் உரையா நிலையாம்.
“ கோத்திர மறிந்து கொள்க பெண்ணையும்
பாத்திரமறிந்து பண்ணுக பிச்சையும் ”
இலையேற் றுயர்நிலை யடைவ ரெனவே
புலமையிற் சான்றோர் புகல்வதும் பொய்யோ ?
நூறுக் கேட்கினும் நூலறி வென்செயும் ?
ஆதியா யவரவர்க் கமைந்தே யுள்ள
இயற்கை யறிவோ டிணைத்துப் பார்த்துத்
தக்க திதுவெனத் தன்னறி வதனால்
நிச்சயித் ததுசெயல் நெறியா மன்றோ ?
ஆதலிற் பாத்திர ராவார் யாரெனத்
தீதற நோக்கிற் றெரிவரோன் பதின்மரே:
அவர் தாம், நற்குணம் அடையவும் உடையரும்;
தவறிலாத் தன்மைய சினேகரும்; தத்தம்
வழியொழுக் கதனில் வழாதுநின் றோரும்;
அழிவிலா மிடியா லமர்தரு வோரும்;
காக்குங் கதியினைக் காணா தோரும்;
ஆக்கிய தந்தை; நல் லாயொடு மாசான்.
ஆவா ராமென அறைந்தனர் மேலோர்
இன்னா ரிலம்பா டதனா லியம்பும்
இளிவர வதனை பேதிலார் தம்மிடை.
மொழியா னாகியும், முன்னைத் தவத்தாற்
றன்னுடைச் செல்வந் தடைய ஈதலும்;
இளிவர வுடையோன் இயம்பா முன்னரே
குறிப்பாற் றெரிந்தவன் கொள்ளக் கொடுத்தலும்;

கொள்ளிற் பிறர்வயிற் குறைகூ றாமலே
உள்ளத் திருப்தியா யுறையவே யீதலும்;
உடையோ னில்லென ஒழித்துச் சொல்லுங்
கடைமொழி யதனைக் கழறா தீதலும்;
உடையான் அன்றோ உடையான் குலமென
உரைத்தன ரன்றே ஒப்பறு வள்ளுவர்?
கொடுத்தலி னல்வரு குணமே தென்னில்,
நான்நான் எனக்கொளும் நானென் பதுவும்
எனதென தெனக்கொளும் எனதென் பதுவும்
ஆற்று நீரினி லாக்கிய வெழுத்தும்
தேற்றமா மதனிற் செறிந்திடு திரையும்
போலா மன்றோ? புகலக் கேளிர் :—
நிலையன் றென்பதை நிச்சய மாகவே
உள்ளங் கைப்பொரு ளெனவே யுணர்ந்தும்
தானே யுண்டும் தானே யுடுத்தும்
தானே அணிந்தும் தானே சுகித்தும்,
தன்சுக மொன்றையே தரிக்குநர் தாமும்
ஆலமா மெனவே யற்றார் தமையிஞ்
ஞால மதனில் நலியவே செய்யும்
சீலமில் பசிப்பிணிச் செற்றிட லன்றோ
ஆலயம் பொருட்கென அறியா தோரும்;
ஈத லிலாவிடத் திருக்கினு மவர்தாஞ்
சாதலே மிகவுஞ் சந்தோட மாமெனச்
சாற்றின ரன்றே சதுமுகன் றானும்.
ஆதலி னுலகம் அழியினு மழியா
நீதிசேர் புகழும் நெறிபல தன்னினும்
ஆதி யாயநல் லறமு மடையா
திருப்பது மிகவும் இழிவே அன்றோ?
ஆகலிற் சன்மம் அடைந்ததன் பயனை
மேதகு செல்வம் மேவிடு வோருக்
கிருமையு மடையவே யீயு மற்றிவ்
ஈகையிற் பிறிதொன் றிலையிலை இலையே.

.A R. ஸ்ரீனிவாச முதலியார்.

ஆனைமலை.

பெரியாரைத் துணைக்கோடல்.

உலகத்துள்ள சராசரப்பொருள்கள் உயர்வு தாழ்வு, சுகதுக்கங்கட்கு ஏதுவாகிய செயல்வேறுபாட்டால் நல்லன அல்லன என இருவகைப்படுவனவாம். இவை தம்முள் ஒன்றும் பலவுமாகக் கூடிய கூட்டமும் நல்லினம் தீயினம் என இருவகைப்படும். கூட்டம், இனம், இணக்கம் என்பன ஒரு பொருளன.

ஒரு பொருள், தீச்செயலைமேற்கொண்ட வேறொரு பொருளைச் சேர்ந்து, அதற்கடங்கி அதன்வழிப்படுமாயின் அது தீயினமென்றும், நற்செயலை மேற்கொண்டபொருளைச் சேர்ந்து அதற்கு அடங்கி அதன் வழிப்படுமாயின் அது நல்லினமென்றுஞ் சொல்லப்படும்.

அறிவாலுயர்ந்த மனிதருள் தீயினமாவது:—நல்வினைக்கு நற்பயனும் தீவினைக்குத் தீப்பயனுமில்லையென்பாரும், விடருந் தூர்த்தரும் நடரும் உள்ளிட்ட குழு. இவர் பழி பாவங்கட்கு நாணாமை, விதிவிலக்குகளையநுசரியாமை, குடிப்பிறப்பு ஒழுக்கம் கல்வியாதியவற்றைப் பேணாமை, பிறரைக் கெடுக்கக் கைப்பொருள் விடுத்தல், தாமே எல்லாமறிந்தவராகமதித்து இறுமாந்து அறிந்தார்வாய்ச்சொல்லை அவமதித்தல், தம்மையிடித்துரைப்போரை அறிவிலரென்றிகழ்தல் முதலிய (தம்மையும் தம்மைச்சேர்ந்தோரையும் மீளாநரகுக்காளாக்குந்) தீமைகளையே செய்வர்.

நல்லினமாவது:—காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் எனப்படுங் குற்றங்கடிந்து, புன்னெறி விலக்கி, நன்னெறிப்புகுத்தும் பெரியார் கூட்டம். இவரும் வலி தவங்களாற் பெரியரும் விருத்தருமெனப்படுவர். விருத்தரும் ஞானவிருத்தர், காலவிருத்தர், சீலவிருத்தர் என வேறு வகைப்படுவர். இவருள் வலியாற் பெரியர் அரசர்; தவத்தாற் பெரியர் முனிவர்; அறவாற் பெரியர் ஞானவிருத்தர்; காலத்தாற் பெரியர் காலவிருத்தர்; சீலத்தாற் பெரியர் சீலவிருத்தர். இவர் தாம் நன்னெறியொழுகுவதேயன்றித் தம்மைச்சேர்ந்தாரையும் பழையினது இன்மை மிகுதிகளா

னும் தீப்பிணியென்றிவற்றானும் வருந்தெய்வக்குற்றங்களை உற்பாதங்களானறிந்து, கடவுளரையுந் தக்கோரையும்நோக்கிச் செய்யுஞ் சாந்திகளாலும், பகைவர், அயலோர், கிளைஞர், வினைஞர் என்றிவர்களான் வரும் மானுடக்குற்றங்களை அவர் குணம், இங்கிதம், ஆகாரம், செயல் என்பவற்றானறிந்து சாமபேத தான தண்டங்களுள் ஏற்றதனாலுங் காத்தற்குரிய பேரறிவாளர்.

"நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு"

என்னும் வள்ளுவர்வாக்கிற்கிசைய நல்லாரைச் சேர்ந்தானொருவனது அறிவு குணந் தொழில்கள் நன்னெறிப்பட்டுஉயரும். தீயாரைச்சேர்ந்தானதறிவு முதலியன புன்னெறிப்பட்டுத் தாழும்.

மேற்குலத்துதித்தோனாயினும் இழிந்தாரோடிணங்கிற் பன்றியோடு கூடிய கன்று போற் பழிபடுவன்; கீழ்க்குலத்துதித்தோனாயினும் நல்லாரோடிணங்கிற் பூவுடன் சேர்ந்த நார் போற் புகழ் பெறுவன்.

இனி தீயார், ஒருவன் வேண்டாதன செய்யுங்கால் அதனைத் தடுக்காது, அவன் கேட்டையே பொருளெனநெஞ்சுட்கொண்டு அது புறந்தோன்றாவகைப் பொய்யுபசாரங் காட்டி வஞ்சித்துக்கண்டு கனி கன்னல் பாகு தேன் பாலினுமினிய முகமன் கூறி, அவன் அம்மிகுதியை மேன்மேலுஞ் செய்து பெருங்கேட்டையக் காரணராகின்றனர். நல்லாரோ, தம்மைச் சேர்ந்தோர் பழியும் பாவமுந்தரும் வேண்டாதன செய்யுங்கால், அவர் மேலிரங்கித் தாமவர்க் கின்சொற் கூறித்தடுக்குமிடத்து, ஒரு வேளை அவர் கேளாதொழியினும் ஒழிவரென்றெண்ணி விரைந்து முற்பட்டுக் "காலொடு கையமுக்கிப் பிள்ளையை வாய் நெரித்துப் பாலொடு நெய் பெய்யுந் தாய்போல்" வன்சொலாலிடித்துரைத்து நல் வழிப்பட்டுய்யக் காரணராகின்றனர்.

அங்கணத்துருத்த பால் எவ்வாறு ஒருவர்க்கும் ஒன்றுக்கும் உதவாமற்போமோ, அவ்வாறே தீயினத்தைச் சேர்ந்தோனும் தானடைய வேண்டிய சுகம் புகழ் பொருள் புண்ணியங்களையும்இழந்து துன்புறுவன். சமுத்திரத்தைச் சேர்ந்த ஊரங்கண நீர் எவ்வாறு "சாக்கடை நீர்" என்னும் கீழான பெயரும் மாறி மேலான தீர்த்த

மாய்விடுமோ, அவ்வாறே பெரியாரைச் சேர்ந்த சிறியாரும் தம் சிறுமைகளெல்லா நீங்கப்பெற்றுப் பெருமையடைவர். பெருங்காயக் குடுக்கையைச் சேர்ந்த புனுகு சவ்வாதும் தம்மணமற்று அம்மணம் வீசல்போலச் சிறியாரைக் சேர்ந்த பெரியாருந் தங்குணமகிமை கெட்டுச் சிறியோராவர். பாலோடு சேர்ந்த நீர் பாலென்றுனாற் போலப் பெரியாரைச் சேர்ந்த சிறியாருந் தஞ்சிறுமை நீங்கிப்பெரியாரென்றாவர்.

சகல சம்பத்துமுடையனாயினும் ஒருவன் நல்லோரிணக்கம் பெற்றிலனாயின் அவன் ஒன்றுமில்லாதவனே யாவன்; ஒன்றுமில்லாதவனாயினும் ஒருவன் பெரியார் கேண்மை பெற்றனனாயின் அவனெல்லாமுடையவனாவன்.

இவ்வளவிற் பெரியார் சிறியார் இன்னரென்பதும், அவராலாம் ஆக்கக் கேடிவை என்பதும் விளங்கக்கிடத்தலின், "துணைக்கோடற் குரியார் பெரியார்" என்பது நன்கு புலப்படும். ஆதலினால் *"சிறியாராயினுர் சார்பினை விழைபன்மின் றிறல்கெழு பெரியோரா, மறிஞராயினர் சார்பினை விழைமினோ" என்றபடி சிறியாரை நீக்கிப் பெரியாரையே துணைக்கொள்க. சிவபெருமானது திருச்சடையேற்றிய நாகங்கள் இயல்பிலே யஞ்சி நடுங்குங் குணமுடையனவாயினும், தாஞ்சேர்ந்த துணையின் பெருமையால் கருடனைப் பார்த்துச் சுகம் விசாரித்தன வென்றாற் பெரியாரைத்துணைக்கோடலின் பெருமைக்கோரளவுமுண்டா ?!

பெரியார் சொல்லை யங்கீகரித்தலால் வரும்ஆக்கமும், அவமதித்தலால் வருங்கேடும் பின்வருஞ் சரிதங்களாலுணரப்படும்.

1\. துணையின்றித் தனியே ஓர் ஊர்க்குச்செல்ல யத்தனித்த வோர் பார்ப்பனச் சிறுவனுக்கு அவன் தாய் துணையின்றித் தனியே செலவது தக்கதன்றென ஒரு நண்டை மட்கலத்துட் பெய்து கொடுக்க அதை யேற்றுக்கொண்டு வழியிற் சென்ற இளைப்பால் ஒரு மரத்தினிழலில் அம்மட்கலத்தைத் தன்னருகில் வைத்துத் தூங்கும் பொழுது அவனைக்கடிக்க வந்த ஒரு பாம்பு தலையெடுத்து அம்மட்

---

*காஞ்சிப்புராணம்.

கலத்தைப்பார்க்க, அப்பொழுது அதனுள்ளிருந்த நண்டு தன் கொடுக்கினாலதன் தலையை இடுக்கிக்கொன்றது. அதனால் அவன் ஆபத்தினின்று விலகிக்கொண்டான்.

2. மாபலிச்சக்ரவர்த்தியின் செருக்கையொழிக்கத் திருமால் வாமனராயவதரித்து அவனிடத்துச்சென்று மூன்றடி மண்ணிரந்த போது அது வஞ்சனையென்றறிந்த குருவாகிய சுக்கிரன் தடுக்க அவன் அதனை யாராயாது நீர்வார்த்துத் தன்னரசை இழந்தான்.

மிக நெருங்கிய சுற்றத்தாராகிய பிதா முதலியவராயினும் யாவர்க்குங்கேடுபயக்கும் இழிதொழில் புரிவரேல், அவருறவை யடியோடு வெறுத்து, அந்நியராயினும் நன்னெறிப்படுத்த வல்லுனராயுள்ளாரைத் தேடிச் சேர்தலே சிறந்த சேர்க்கையாம். இதற்கு, பிதாவாயிருந்தும் தீயனாகையால் அவனுறவை வெறுத்து நாராயணனைச்சேர்ந்த பிரகலாதனும், தமையனாயிருந்தும் கொடியனாகையால் அவனை முற்றத்துறந்து இராமபிரானைச் சேர்ந்த விபீடணனுமே சான்றாவர். நிற்க,

எவ்வெவ்விடங்களில் என்னென்ன சம்பவம் நிகழுமோ அவற்றை யெல்லாஞ்சிறிதும்பிறழாதுஉள்ளவாறே அரசர்க்கும் பிறர்க்கும்அறிவித்தலின் ஒற்றாகியும், விழிப்புலனுக்குஞ் செவிப்புலனுக்கு மெட்டாததும் போக்கு வரவு செய்ய இயலாததுமான அதி தூரதேசத்துச் சமாசாரங்களையெல்லாம் விளங்கக்காட்டலிற் றூரதிருட்டிக்கண்ணாடியாகியும், தற்காலத் துரைத்தனத்தார்க்கு மற்றைத்துணைகளாற் சாதித்தற்கரியனவாயுள்ள அருமபெருஞ் செயல்களனைத்தையுந் தெரிந்துவரும் பொருளை யேலவே யெடுத்துரைத்தலின் மந்திரியாகியும், நாடோறும் புதிதுபுதிதாகிய பக்குவத்துக்குத்தக்க போதனைகளைப்படிப்பித்தலின் உபாத்தியாயராகியும், தான் செய்யுந் தத்துவோபதேசங்களினால் "நீக்கரும் வினைமாற்றி நன்னெறியினிடைச்செலுத்திப்போக்கின்மேயின்" ஞானாசிரியராகியும், பலவகை மனமுயற்சி சரீரமுயற்சிகளாலும் பிறதேச வர்த்தமானமுதலிய நானாசங்கதிகளையறிதலிற்பேராவலுற்று "இதுகாறுங் கண்டிலமே" என்னுந்துன்பத்தாலும் வாடியிருக்கும் மனதைத் தன் புதினசந்திரிகையாற் குளிர்வித்தலிற் சந்திரனாகியும், அஞ்ஞான விருளகற்றி மெய்ஞ்ஞான

வொளிபரப்பி யாவையும் வெளிப்படவிளக்கி யாவர் மனத்தையும் மலர்வித்தலிற் சூரியனாகியும், யாவரேயாயினும் எங்கிருந்தாயினும் எப்பொழுதாயினும் யாதொன்றை விரும்பி யிரக்கினும் யாதோர் குறையை முறையிடினும் அவற்றை அவ்வவர்க்கு அங்கங்கு அவ் வப்போது பிரசாதித்தலிற் கண்கண்ட தெய்வமாகியும், சமயவாதிகள், வித்தியாவாதிகள், நியாயவாதிகள் என்னு மிவர் வாதப்போர் புரியுமிடத்துப் பகைவர் அயலோர் கிளைஞர்* என்னும் வேறுபாடு கருதாது யாவரிடத்தும் பால்கோடாது பகலெனை நடுநின்று உள்ளதை உள்ளதாகவும் இல்லதையில்லதாகவும் எடுத்துரைத்தலின்நிறைகோலாகியும், யாவரேயாயினும் முறைதிறம்பி நடப்போராதுஅயோக்கியங்களை யாவர்க்கு மெடுத்துக் காட்டி யவமதித்துத் தண்டித்தலிற் படைக்கலமாகியும், ஒழிந்த பிறவாகியுமிருத்தலின் "வர்த்தமானபத்திரமே யாவர்க்கு மின்றியமையாப் பெருந்துணையாம்." இப்பத்திரிகைப்பெருந்துணைபற்றி நம் தேசத்தாரடைந்த நன்மைக்கோரளவில்லை. எவ்வகையிலும் மேனிலையடைய விரும்புஞ்சகலரும் *ஒற்று ஆடி அமைச்சு உபாத்தி குரு சோமன் ஞாயிற்று ஆதிகோல் பத்திரம் என மேற்கூறிய பெருந்துணை பெற்றுய்யக்கடவர்.

திரு. சோமசுந்தரம் பிள்ளை,
கொழும்பு.

---

* நாகரீகம்.
(சாவித்திரி சரித ஆராய்ச்சி)

தற்காலத்தினராகிய நாம் நாகரீகத்தில் முற்போக்கடைய விரும்புகின்றது உண்மையாயின், நம்முன்னோர் போக்கினைப் பின்பற்றியொழுகலின்றியமையாததாகும். "நவீன வளர்ச்சி" யெனச்செம்பொருள் பயக்கும் "முற்போக்கு" என்னும் பதத்திற்கு "முன்னோர் நடை" யென மற்றொரு நுண்பொருளும் அமைந்து நிற்றலைக்காண்க.

---

* ஒற்றுமுதற் பத்திரீறாவனை சேர்த்துப்படிக்கக் குறளுருவாதல் காண்க

* இது மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தின் எட்டாவது வருஷோத்ஸவக் கூட்டத்தில் வாசிக்கப்பட்டது.

அம்முன்னோர் எத்தகைய செம்மை நெறி உண்மை உறுதி உடையவர்களா யிருந்தனரென்பதை நமது பன்னூற் றெகுதிகளும் சாட்சி பகர்கின்றன.

அவ்வுண்மை, உறுதி, செந்நெறியாதிய உயர்குணங்கள் அக் காலத்துப் பெரியோர், சிறியோர், ஆடவர், மகளிர் ஆகிய அனைவ ரிடத்தும் அசைக்கவொண்ணாத இயல்புக் குணங்களாய் அமைந்து கிடந்தமையே அரிதினும் அரியதாகும்.

உதாரணமாக, அசுவபதி மகாராஜாவின் அருந்தவப் புத்திரி யாகிய சாவித்திரியின் சரிதத்திற் சிலவற்றை யாராய்வோம்:—

இதில் கதாநாயகியாகிய சாவித்திரி தனக்கேற்ற கணவனைத் தானே தெரிந்து நிச்சயிக்குமாறு தந்தையாலும், மந்திரிபிரதானியர் களாலும் ஒருமனதாய் அநுமதிக்கப்பட்டுத்தேசசஞ்சாரம் செய்திரு க்கிறாள்.

இரண்டாவது, அப்படிச்செய்த சஞ்சார இறுதியில் ஊழ்வலி கூட்ட தன்னெதிர்ப்பட்ட நாடிழந்து காட்டில் கஷ்டஜீவனம்செய்து காலங்கழித்த மாளவதேசாதிபதியின் மைந்தனான ஸத்தியவான் என்னும் வாலிபனிடத்துத் தன் மனஞ்செல்ல அவனே மணக்கத் தக்கவனென மதித்து உறுதிகொண்டு திரும்பிவந்து தந்தையிடம் அறிவிக்க, உடனிருந்துகேட்ட முக்காலமும் உணர்ந்த முனிவர் பெருமானாகிய நாரதபகவானால் அப்படி வரித்த வரன் ஆண்டொன் றில் ஆயுள் உலக்கக்கூடிய அற்பாயுள் உடையவனாதலால் அக்கருத் தைமாற்றி வேறு வரனைத் தெரிந்துகொள்ளுமாறு பலவாறு வற்புறு த்தினமை கேட்டும் சித்தம் சலியாது, ஓர்கால் மனதால் மணந்த ஒருவனை மாற்றி இன்னொருவனை ஒருபோழ்தும் கருதமுடியாது எனமறுத்ததும், அதனால் எதுவரினும் வருகவென்று உறுதியுடன் அவனையே மணக்க விரும்பியதும் ஈண்டு ஒவ்வொருவரும் ஆழ்ந்து சிந்திக்கற்பாலதன்றோ?

என்னே முற்கால மகளிரிடத்தமைந்திருந்த உறுதி! என்னே மனச்சான்று! என்னேகற்பு! என்னே அறத்காறு! ஆயின்,இத்தகைய உயர்குணங்கள் அச்சாவித்திரியைப்பயந்த பெற்றோரிடத்தும் உள வென்பதற்கு அன்னார் தமதருமைப்புதல்வியின் மனவுறுதியைக்

கண்டு மாற்றரிதென்றுணர்ந்து மனமுவந்து ஒத்த மனப்பாங்கினராய் அவ்வரனுக்கே மணஞ்செய்தளித்தமையே சான்று பகர்கின்றது.

இத்தகைய ஒப்புயர்வற்ற கற்புறுதியும், ஸத்திய புத்தியும், கலங்காத்திட்பமும் கண்டன்றோ அறக்கடவுளும் அக்கீங்கையின் கணவனுயிரைக் கவர்ந்தேக அஞ்சி விடுத்தேகினன்போலும். இதனினும் அரிய பெரியனவும் உளவோ? அப்பெண்மணி அறக்கடவுள்பாற் கேட்ட இதர வரங்களில் தன்னைப்பெற்ற தந்தைக்கு மக்கட்பேறில்லாக்குறைவை நீக்க முதலிற் கோராது தனது மாதுலனாகிய மாளவ தேசாதிபதியின் இழந்த கண்களையும் ராஜ்யத்தினையும் முதலிற்கோரிய தாய்ச் சொல்லப்படுதல் இக்காலத்திய ஒவ்வொரு மகளிர்க்கும் அறிவுறுத்துவதாமன்றோ? தருமசாஸ்திர வாராய்ச்சியிலும், ஆராய்ந்த வழி யொழுகுதலினும் நமதுபூர்விக ஆரிய நாரீமணிகட்கு மேற்போன நாகரீகர்கள் எத்தேசத்திலும் இருந்திருக்கமாட்டார்களென்பதே நமக்கு இன்றும் இனியும் பெருஞ்சிறப்பைத்தந்து பெருமைபடுத்துவதாகும். தவிர, மெல்லியதேகமும் சுகபோக வாழ்வும் பெற்ற நமது பூர்விக க்ஷத்திரிய மாதர்கள் ஸத்தியம், கற்பு, நீதி இவைகட்குக் கட்டுண்டு சமயம் வாய்த்தபோதெல்லாம் எண்ணமுடியாத கஷ்டங்களையும், வறுமைகளையும், உற்சாகத்துடன் பணிவாய் ஏற்று அனுபவித்து வந்திருப்பதை எண்ணுங்கால் மனங் கூசுகின்றது. இப்பெரிய நடையினை நமது சாவித்திரி சரிதத்தில் மிகுதியாக் காணலாம்.

இக்குண விசேஷம் அக்காலங்களில் செல்வச் செழுமுகைகள் அன்ன, சந்திரமதி, தமையந்தி, நளாங்கினி முதலிய கணக்கற்ற இராஜபுத்திரிகளிடத்தும் அமைந்துநின்றதுண்மை. அரசவர்க்கத்திற் பிறந்து அரண்மனை போகத்திலாழ்ந்திருந்த யுவதிகளின் பயிற்சியே அத்தகைய தென்னின் ஏனைய குலமாதர்களின் தன்மை எவ்வாறிருத்தல் கூடுமென்பதை உய்த்துணரல் எளிதாகும்.

சீரியல் பழுத்த ஆரிய மணிகாள்! இதுவரையில் நாம் மேலே ஆராய்ந்து கண்டவைகளைப்போல் ஒவ்வொரு சரிதங்களிலும், ஆராய்ந்து காணக்கடவன அளப்பிலவாகும்.

அவ்வகையாராய்ந்து அதற்கேற்ப நாம் வேண்டிய திருத்தங்களைச் செய்துகொள்வதே "நாகரீகம்" என்னும் மொழிக்குப்பொருளும் பயனுமாகும். விரிக்கில் இதுபோற் கவனிக்கற்பாலன பலவுளவெனினும் விரிவஞ்சி இம்மட்டோடு முடிக்கலாயிற்று

ஆலாம்பிகையம்மாள்,
திருப்பாதிரிப்புலியூர்.

தனிகர் தரித்திரரின் இலட்சணங்கள்.*

ஒரு காலத்தில் பக்கிரி ஒருவன் ஓர் சபையில் பேசிக்கொண்டிருப்பதை நான் கண்டேன். அவன் ஓர்வேஷதாரி. பக்கிரிக்குரிய லக்ஷணங்கள் அவனிடத்திலில்லை. அவன் அப்பொழுது செல்வர்களைப்பற்றி அவதூறான பற்பல வசனங்களை மொழிந்துகொண்டும், கேட்டவர்கள் வெட்கிக்கத்தக்க நிந்தாப் பிரஸங்கமொன்றை வெகு தாட்டியாய்ப்பொழிந்துகொண்டுமிருந்தான். நான் அவனைப் பார்த்த சமயத்தில் " வறியவர்கள் கைகள் ஒன்றும் செய்யமுடியாமல் கட்டப்பட்டிருக்க தனிகர்களது உத்தேசங்களின் பாதங்கள் முடமாயிருக்கின்றன. இரக்கமுள்ளார் தனமில்லாதவர்களாயும், பரோபகாரம் செய்யச் சக்தியுள்ளவர்கள் ஈரமில்லா நெஞ்சத்தவர்களாயும் இருப்பதை உலகத்திற் காண்கின்றோம். " என்று சொல்லிக்கொண்டிருந்தான். அதுகேட்டுச்செல்வர்களின் ஔதார்யத்தால் ஆதரிக்கப்பெற்றவனாகிய நான், அப்பக்கிரி சொல்லியதை அங்கீகரிக்காமல் அவனை நோக்கி " ஹே நண்பனே! தனிகர்கள், வறியவர்களுக்கு வரும்படிக்கிடமாகவும், பரதேசிகளுக்கு ஆசிரிய ஸ்தானமாகவும், பிரயாணிகளுக்குத்தங்குமிடமாகவும், சன்னியாசிகளுக்குக் களஞ்சியமாகவும், பிறர்நலத்தினிமித்தம் பளுவான சுமைகளைத் தாங்குகின்றவர்களாகவும் இருக்கிறார்கள். செல்வர்கள் போஜனஞ்செய்யக் கைநீட்டும்பொழுது அவர்களைச்சார்ந்துள்ளோரும் அவர்களது வேலைக்காரர்களும் அவர்களுடன் உணவைப் பங்கிட்டுக்கொள்கிறார்கள். அவர்களுக்குக் கண்டுமிகுந்த உணவை, அவர்கள் பந்துமித்திரர்களும், அயலார்களும், விருத்தர்களும், கணவனையிழந்தகைம்பெண்களும் உண்டு திருப்திபடைகிறார்கள். ஆலயங்கள் கட்டுவதும், அவற்றிற்கு மானியங்கள் விடுவதும், களைப்படைந்த பிரயாணிகளின் சுகத்திற்காகச் சத்திரங்கள் கட்டுவதும், அடிமைகளுக்குச் சுயேச்சையைத் தருவதும், ஐயமிடுவதும், தானஞ்செய்வதும், தெய்வத்திற்குப் பலிகொடுப்பதும் ஆகிய இவையெல்லாம் தனிகர்கள் செய்கின்ற வேலைகளா

* இது ஸாதி என்ற பாரிஸீகப் புலவர் இயற்றிய குலிஸ்தான் என்பதினின்றும் மொழி பெயர்க்கப்பட்டது.

ருர். ஆகையால் மித்திரா! இப்பேர்ப்பட்ட புண்ணியங்களை உன் போலியர்கள் எப்படித் தேடிக்கொள்ளலாகும்? நீ செய்யக்கூடிய தெல்லாம், தேசங்கள்தோறும் சஞ்சரித்துக்கொண்டு தினம் இருமுறை பகவானைத் தியானிப்பதே.

மேலும், ஒளதார்யமான விஷயங்களைச் செய்யக்கூடியவர் யார்? தர்மாசரணைகளைக்குறைவற நடத்த வல்லோர் யார்? ஆராய்ந்துபார்க்குமளவில், இவ்விரண்டு குணங்களும் தனிகர்களிடத்தேயே பெரும்பாலும் காணப்படுமென்பது எனது அபிப்பிராயம். ஏனெனில், இரந்தோர்க்குக் கொடுத்தலால், பரிசுத்தமாக்கப்பெற்ற தனமும், தூல்யமான வஸ்திரமும், அழியாப்புகழும், கவலையற்ற இருதயமும், செல்வர்களிடத்தே தான் காணலாம். எப்படி தூய உடைகள் நமது பக்தியை அதிகரிக்கின்றனவோ அவ்வாறே, நல்ல உண்டியும் நமது தியானத்திற்கு அநுகுணமாயிருக்கின்றது. வெறும் வயிற்றுடன் கூடியவனுக்குப் பலமும், வெறுங்கையையுடையவனுக்கு உதாரகுணமும், உண்டாகுமோ? விலங்கிட்ட பாதம் நடக்குமோ? அதுபோல தன் வயிறு பசித்திருப்பவன் இரப்போர்க்குப் பிச்சை கொடுத்தல் ஆகுமோ? வறிஞன் இரவில் அயர்ந்து நித்திரை செய்யான். ஏனெனில் நாளைக்குத் தன் வயிற்றிற்குத் தேடிக்கொள்வதிலேயே அவன் மனம் செல்லும். வறுமையும் சாவகாசமும் ஒருவனிடத்திற் சேர்ந்திரா. வறியவன் மனம் சமாதானத்தை யடைதல் முடியாது. தனிகன்சாயங்காலத்தில் பகவானைத் தோத்திரம் செய்துகொண்டிருக்கும்போது, தரித்திரன் தனக்கு இராப்போஜனம் எப்படிக்கிடைக்கப் போகிறதென்று கவலையுற்றிருப்பான் ஆகையால் தரித்திரன் தனிகனுக்கு எவ்விதத்திலும் நிகராகான். தனிகன் ஏகாக்கிரசித்தனுயிருந்துகொண்டு பகவத்தியானம் செய்கின்றான். தரித்திரனுக்கு ஸமாதிநிலையிலிருத்தல் முடியாது. ஆதலால் தனிகனுடைய தபஸைப் பகவான் ஏற்றுக்கொள்ளுகிறார். மனத்தை ஒருவழிப்படுத்தாது அதைச் சிதறவிட்டுச் சஞ்சலிக்கச் செய்வதால் தரித்திரனுக்கு ஸமாதிநிலை கொள்ளாது. அன்னவிசாரமின்றி யிருக்கும் தனிகன் தியானநிஷ்டையிருக்கலாம். அன்னவிசாரமே தொலையா விசாரமாகக்கொண்ட தரித்திரன் அவ்வாறிருத்தல் முடியாது. அதனுற்றான் அராபியர்கள் கடவுளைப் பிரார்த்திக்கும்பொழுது “பராபரமே! என்னைக்கொ

டிய தரித்திரத்தினின்றும் காப்பாற்றுவீராக" என்று இறைஞ்சிக் கேட்டுக்கொள்கின்றனர். தீர்க்கதரிசியாகிய முகம்மது தரித்திரமே இகபரமிரண்டிலும் ஒருவன் முகத்தைக் கரியாக்குகின்றது. என்று சொல்லிமுடித்தேன்.

உடனே பக்கிரி: ஐயா தீர்க்கதரிசியாகிய நமது முகம்மதே நம் வேத புஸ்தகமாகிய குருனில் "தரித்திரமே என் மகிமை" யென்று சொல்லியிருக்கிறதை நீர் அறிந்திலீரோ? என்று கேட்டான்.

அதற்கு நான் ஐயா பக்கிரியே! சும்மாயிரும். லோகநாதனை முகம்மது உலக வாழ்க்கையைத் துறந்து தனக்கு நேர்ந்தனவெல்லாம் பிராரத்த வசத்தால் வருவதென்று ஸமசித்தத்துடன் அவைகளைப்பொறுத்துக் கொள்ளும் துறவிகளின் ஒழிவை அவ்வாறு சொன்னாரேயன்றிக் கிழிந்த வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு வாங்கும் பிச்சையைக் கடையில் விற்கின்ற கபட சன்னியாசிகளான பக்கிரிகளின் தரித்திரத்தைப்பற்றிச் சொன்னாரல்லர். பக்தியில்லாத பக்கிரியின் தரித்திரம் ஈற்றில் நாஸ்திகத்தில் வந்து முடியும்.

ஏனென்றால், தரித்திரமும் நாஸ்திகமும் ஒன்றையொன்று அடுத்திருக்கின்றன. மேலும், நாம் தனிகனாயில்லாவிடில், வஸ்திரமில்லாதவர்களுக்கு அணிந்துகொள்ள ஆடையைக்கொடுத்து அடிமையாயிருக்கின்றவர்களை அடிமைத்தனத்தினின்றும், நீக்கமுடியாது. நம்போலியர்களுடைய அந்தஸ்தையும், தனிகர்களுடைய அந்தஸ்தையும்; ஒப்பிடலாமா? நீட்டி வாங்கும் கைகளுக்கும், கொடுக்கும் கைகளுக்கும், ஒற்றுமையுண்டோ? சுவர்க்கத்திலுள்ளவர்கள் யதேஷ்டமான பலன்களை யனுபவிக்கிறார்களென்று குருனில் தெளிவாய்ச்சொல்லியிருக்கிறது எதற்காகவென்றால்; அன்ன விசாரத்துடன் கூடிய வறியவனுக்குப் பரிசுத்த மனச்சந்தோஷ மிலதென்றும், ஸ்திரமான வரும்படியுள்ளவனுக்குத்தான் திருப்தியுண்டென்றும், நமக்கு எடுத்து விளக்குவதற்காகத்தான். தாகக்காரனுக்கு ஸ்வப்பனத்தில் உலகெல்லாம் நீரூற்றாகத் தோன்றுகிறது. ஒருவன் கஷ்டத்தையே அநுபவித்துக் கொண்டிருக்கும் அபாக்கியவானா யிருப்பானாயின், அவன், தனக்கு மறுமையில் கிடைக்கப்போகின்றதான தண்டனையைமறந்து, இன்னது கிரமம், இன்னது அக்கிரமமென்றதைக்கவனி

யாமல், யாதொரு பயமுமின்றித் தீச்செயல்களைச் செய்யத்தொடங்குவதை நாம் பிரத்தியக்ஷமாய்க் காண்கிறோம். தனிகனை யெல்லோரும் தயவான கண்களுடன் பார்க்கிறார்கள். அன்றியும், கிரமமாய்த்தேடிய தனம் கையிலிருத்தலால் அது அவர்களை அக்கிரம காரியங்களில் பிரவேசிக்காமல் காப்பாற்றுகிறது. நான் சொல்லுவது மெய்யோ பொய்யோ நீ யோசித்துப்பார். பின்கட்டுமுறையாய்க் கட்டிய கைகளுடனுவது சிறைச்சாலையில் கற்பழிந்து சீர்கேடான நிலையிலிருப்பதை... மணிக்கட்டுவரை வெட்டுபபட்ட கைகளுடனுவது நீ ஒருவனைக் காண்பாயாகில், அவன் தரித்திரன் என்று நிச்சமாய் அனுமானிக்கலாம். தைரியசாலியாயிருக்கிற தரித்திரன் ஆத்திரத்தால் தூண்டப்பட்டவனுய்வீடுகளில் கன்னமிட, அதற்காக அவனை முழங்காலோடு வெட்டிவிடுகிறார்கள் காமநோயால் தீண்டப்பட்டவறிபோன், செயற்பாலனவல்லாத பாவ காரியங்களைச் செய்யத்துணிகிறான். செல்வனுக்குத் தனத்தின் மகிமையல்ல, எல்லாவிஷய சுகங்களும் பாவமின்றிச்சித்திக்கும். பசியால்பீடிக்கப்பட்டவன் உணவுப்பொருள்களைத் திருடுவதுபோல், காமத்தால் தீண்டப்பட்ட தரித்திரன் பதிவிரதத்தைக் கெடுக்கின்ற பாவச்செயல்களைச் செய்வான். அனேக நல்ல மனிதர்களும் வறுமையால் துன்மார்க்கத்தில் விழுந்து தங்கள் யோக்கியதையை அவமானமென்ற காற்றடித்துப்போகும்படி விட்டுவிட்டிருக்கிறார்கள்.

"மானம் குலம்கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்." என்றேன்.

நான் மொழிந்த வார்த்தைகளைக்கேட்டவளவில் பக்கிரி பொறுமையென்ற கடிவாள வாரைக் கையினின்று நழுவவிட்டுத் தன் நாவாகிய கத்தியை உறையினின்றும் உருவி மானமின்மை என்ற சமபூமியில் சொல்வன்மையாகிய குதிரையை வேகமாகச் செலுத்தி என்னை மூர்க்கமாய் எதிர்த்தான். அவன் சொன்னதாவது, "ஓ பெரியவரே! செல்வரைப்புகழ்வதில் அதிசயோக்தியாய் மிதமிஞ்சிப்பேசினீர். நீர் சொல்வதைக் கேட்ட ஒருவன் "செல்வந்தான் தரித்திரமென்ற விஷயத்திற்கு முறிவு" என்றும், "ஸ்வர்க்கவாயிலைத் திறக்கும்

கங்கையை கங்கை என்று சொல்லிச் சார்ஜ் செய்யவேண்டும். கங்கையுள்ள பாத்திரத்தில் இருபுறமும் தூக்கக்கூடியதாகக் கயிறு கட்ட வேண்டும். இல்லாவிட்டால் தூக்கிவைத்து எடுக்கும்போது கங்கை சேதப்படும். சரியான பாத்திரத்திற் பத்திரப்படுத்தினல் கங்கை 12 வருஷம் வரை கெடாமல் இருக்கும்.

காசி.

பிரயாகையிலிருந்து காசிக்குச் சார்ஜ் ரூ 4—8—0 சென்னைக்கும் காசிக்கும் ரூ 25—11—0. இருபது நாள்வரை இறங்கி ஏறலாமாம். காசியின் சுற்றளவு 40 மைல். பஞ்சயாத்திரைக்கு 5 நாள் செல்லும். அங்கு (காசியில்) அநேகர் தங்குவதற்கு சௌகரியமான இடம் இருக்கிறது.

ஸ்ரீ விசுவநாதசுவாமி, அன்னபூரணி, விசாலாட்சி, கேதாரேசன், கணபதி, இந்துமாதவன், அனுமான், கவுடிபாயி கோவில்களில் சோழி போட வேண்டியது. பைரவர் கோவிலில் கயிறு கட்டிக்கொள்ள வேண்டும். கங்கைக்கு அக்கரையில் காசி ராஜாவின் அரண்மனையும், புதுவியாசர் கோவிலும் இருக்கிறது. இதற்கு 4 மைல் தூரத்தில், ஓர் மாந்தோப்பில் வியாசர் கோவில் இருக்கிறது. இதற்குப்போகிற பாதை ஒற்றையடிப்பாதையே. வண்டி போவது கஷ்டம். இவ்வியாசர் கோவிலுக்குப் போகிறவழியில் ஓர் பெரிய துர்க்கை கோவிலும் குளமும் இருக்கின்றன.

"அறுபத்துநான்கு கட்டம்" என்பவை 64 பேர் இட்ட படித்துறை. தோணி வழியாக ரயில்பாலத் துறை வரையில் போனல் அதைப்பார்க்கலாம். இதில் மணிகர்ணிகை, சங்கரதீர்த்தம் இரண்டும் முக்கியமானவை. இவற்றில் சில படித்துறை இடிந்திருக்கின்றன. இவ்விடத்தில் லோககுரு ஸ்ரீ சங்கராசாரியார் சுவாமிகள், திருப்பனந்தாள், திருவாவடுதுறை முதலாயினோரது மடங்களில் இறங்குவது சௌகரியமாய் இருக்கும். இங்கிருந்த பழைய விசுவநாதஸ்வாமி கோவில் 1603 ல் மகமுது கோரி என்பவனல் இடிபட்டுப்போயிற்று.

காசியில் "அரிச்சந்திர பஸார்" என்ற ஓர் பெரிய கடைத்தெரு உளது. இது சென்னையிலுள்ள சைனாபஜார், கொத்தவால்சாவடி போன்றிருக்கும். இதுதான் அரிச்சந்திர மகாராஜன் சந்திரமதியை விற்ற இடமாம். சமீபத்திலுள்ள அசேகட்ட மயானத்தில் தான் அரிச்சந்திரன் இருந்ததாம். இவ்விடத்தை இப்பொழுது அம்மயானத்தில் போடப்பட்டுள்ள மேடை ஒன்று குறித்துக்காட்டுகிறது. வீரவாகு வமிசத்தார் இன்னும் அங்குளர். அவர்களுக்குப் பிரேதம் ஒன்றுக்கு $1\frac{1}{2}$ ரூபா விதம் கொடுத்துவிட வேண்டியதாம். வீரவாகுவின் வீடாக அங்குள்ளோர் மூன்று மெத்தையுள்ள ஓர் வீட்டைக் காட்டுவார்கள்.

காசியில் தற்காலம் பிரமஞானசபைத் தலைமை வகித்து வரும் ஸ்ரீமதி அனிபெஸண்ட் அம்மையால் காசி ராஜா அவர்கள் கொடுத்த காலி நிலத்தில் ஸ்தாபிக்கப் பட்டு வரும் "ஸெண்ட்ரல் ஹிண்டு காலேஜ்" பார்க்கத்தக்கது.

வைத்திநாதம்.

கயாவிலிருந்து வைத்திநாதத்திற்குச் சார்ஜ் ரூ. 2—11—0 டிக்கட்டில் "பைத்நாத்" என்று எழுதப்பட்டிருக்கும். பைத்நாத் ஜங்ஷனில் இறங்கி 4 மைலுக்கு வேலைக்காரர்களால் போடப்பட்ட 'சின்ன ரயிலில்' போக வேண்டும். ரயிலுக்கும் ஊருக்கும் அரை மைல். இங்கு வண்டிகளுக்குப் பதிலாக பல்லக்குகள் வந்து காத்துக் கொண்டிருக்கும். மூட்டைகள் காவடி போல் கட்டித் தூக்கப்படும். மூட்டை எடுக்க ஆள்கள் மிகுதியாக அகப்படுவார்கள். தங்குமிடமும் மிகுதியாயுள்ளன.

திக்குவிஜய காலத்தில் கைலையங்கிரியை அசைத்து தண்டனையுற்ற பின்பு பரமனால் அளிக்கப் பெற்ற லிங்கத்தை இராவணன் இங்கேயே வைத்துப் பூஜை செய்தான் என்று சொல்லப்படுகிறது. இந்த லிங்கத்திற்கு 5 இடங்களிலிருந்து கங்கை நீர் கொண்டுவந்து அபிஷேகம் செய்வோர் உலகத்தையாளும் உயர்நிலையை அடைவராம்.

கமலாலயன்.

புத்தககுறிப்பு.

சௌமியவருஷ நூதன தமிழ்ப்பஞ்சாங்கம்:— புஸ்தக ரூபமான பஞ்சாங்கங்கள் பல வெளிப்பட்டிருப்பினும் அரிமழம் ப்ரும்மஸ்ரீ நரசிம்மசாஸ்திரியவர்கள் குமாரர் ப்ரும்மஸ்ரீ காமாக்ஷிநாதசாஸ்திரியார் அவர்கள் கணனம் செய்து வெளியிட்ட இப்பஞ்சாங்கமே மிகச் சிறந்ததாகின்றது. உலகவாழ்க்கையில் வைதிக லௌகிக காரியங்கட்கு வேண்டிய பற்பல விஷயங்கள் அடங்கப்பெற்றது; சோதிடம் பயில்வார்க்கு மிகப் பலன்தருவது. சோதிட சம்பந்தமாக என்னென்ன விஷயங்களைத் தெரிய விரும்புகினும் அவ்வவற்றின் விவரமெல்லாம் இப்பஞ்சாங்கத்தில் அடங்கியிருப்பதால் தமிழ் நாட்டுக்கு இப்பஞ்சாங்கம் இன்றியமையாததென்றே கூறலாம். நல்லகடிதத்தில் டெம்மி 130 பக்கங்கொண்டது. சுத்தமான பதிப்பு. விலை அணா 8. இதனை வாங்கி வாசித்தவர்கள் இவ்விலை பெறத்தக்கதென்றே மகிழ்வார்களென்பது திண்ணம்.

மீனலோசனி:—மதுரை செயிண்ட்மேரி உயர்தரகலாசாலை உபாத்தியாயராகிய ஸ்ரீ மு. கோவிந்தசாமி ஐயர் அவர்கள் "மீனலோசனி" என்னும் ஓர் நவீன தமிழ்க்கதையை நமக்கு அனுப்பியுள்ளார். இதில் அத்தியாயந்தோறும், படிப்போர்க்குக் கல்வி யறிவு ஒழுக்கம் ஆகிய குணங்கள் உண்டாகச்செய்யும் விஷயங்கள் கூறப்பட்டும் மேனாட்டு "நாவல்" களைப்போல் கோட்டைகள் மாளிகைகள் வனாந்திரங்கள் முதலியவைகளின் வர்ணனைகள் நன்கு உரைக்கப்பட்டும் இருக்கின்றன. மீனலோசனிக்கும் கோமளத்திற்கும், பசுபதி முனிவருக்கும் மீனலோசனிக்கும், மீனலோசனிக்கும்சுந்தரத்திற்கும் நடந்த சம்பாஷணைகள் படிப்பவர் மனத்திற்கு மிக்க இன்பம் விளைவிக்கும். கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பதற்கு இக்கதை தக்கதோர் சான்று. ஊழின் பெருவலியால் சுந்தரமும் மீனலோசனியும் படும் துயரங்களை எடுத்துரைக்கும் பாகம் கன் மனத்தையும் கரைக்கும். மேலும்இக்கதையில்சைவசித்தாந்தசாரம் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கிக் காட்டப்பட்டிருப்பதோடு உயர்ந்த நூல்களிலிருந்து பொருத்தமான இடங்களில் மேற்கோள் செய்யுட்கள் நன்கு கூறப்பட்டிருக்கின்றன. இந்நூலை வெளிவரு

மாறு செய்த ஸ்ரீஞானசம்பந்த சுவாமிகள் பீடம் வகித்துள்ள ஸ்ரீலஸ்ரீ பண்டாரசந்நிதிகள் இன்னும் அநேக நூல்களை வெளிப்படுத்துவாரென்று நம்புகிறோம். இந்நூலாசிரியருக்கு இதுபோல் அநேக புத்தகங்களை யெழுத மேன்மேலும் ஊக்கமும் மனவலியும் ஓங்கவேண்டுமென்று திருவருளைச் சிந்திக்கின்றோம். இப்புத்தகத்தின் விலை அணு எட்டே.

இலக்கணமுறைத் தமிழ்ப்போதகம்:—இது தஞ்சாவூர் கொள்ளுப்பேட்டைத் தெருவிலிருந்த தமிழ்முனிஷியாகிய ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளையவர்கள் இயற்றியது. தமிழ்கற்கும் ஐரோப்பியர்க்கும் புதிதாய் இங்கிலீஷ்கற்கும் சிறுவருக்கும் இது உபயோகமுள்ளதாதலாலும் இதன் விலை அணு நாலேயாகையாலும் முதற்பதிப்பு முழுதும் சீக்கிரத்தில் விலையாகுமென்றும் இரண்டாம் பதிப்பு பருக்கிப் புதுக்கிப் பதிப்பிக்கப்படும் என்றும் எண்ணுகிறோம்.

பிரம்மஞானசங்கிரகம்:—இது தமிழ்நாட்டில் "பிரம்மஞான சாஸ்திர" விஷயங்களை அறியாதார் அறியவும், அவற்றைப்பற்றித் தப்பு அபிப்பிராயம் கொண்டார் திருந்தவும் வேண்டி நாகபட்டினம் பிரமஞான சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீ ஜி. சாம்பசிவையரால் C. W. லெட்பீட்டர் அவர்கள் இயற்றிய "An Outline of Theosophy" என்பதன் மொழிபெயர்ப்பாக இயற்றப்பட்டுளது. இதில் பிரம்மஞானசாஸ்திரத்தின் கொள்கைகள் சுருக்கமாகவும் மிகத்தெளிவாகவும் உரைக்கப்பட்டிருக்கின்றன. இந்நூல் அன்னிபெஸண்ட் அம்மைக்கு அர்ப்பணம் பண்ணப் பட்டிருக்கிறது. இதன் விலை அணு ஆறே. வேண்டுவோர் நாகப்பட்டினத்திலுள்ள வக்கீல், ஜி. சாம்பசிவையருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பத்திரிகைகளின் வரவு:— செந்தமிழ், சவுத் இந்தியன்மெயில், (மதுரை,) சூரியோதயம், (புதுச்சேரி), வித்தியாபாஸ்கரன் (சிலாங்கூர்), லோகோபகாரி (சென்னை), ஸ்ரீவாணி விலாஸினி (ஸ்ரீரங்கம்), கமலாஸினி (திருவாலூர்), இந்தியா (புதுச்சேரி), தென்னிந்தியா மித்திரன் (கும்பகோணம்), நீலலோசனி (நாகைப்பட்டினம்), இவைகளை வந்தனத்துடன் பெற்றேம்.

பத்திராதிபா.